# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110242

1. District : Coimbatore
மாவட்டம்
PS: V & AC
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No.: 04/2020/AC/CB
மு.த.அ. எண்
Date: 28.08.2020
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a) and (b)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 26.08.2020 Date to : 27.08.2020
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1130 hrs Time to : 1000 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28.08.2020 Time : 0500 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 0500 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Orai : Tamil computer typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 30 km South East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Office of Village Administrative Officer, Rasipalayam, Sulur taluk, Coimbatore District
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. PRAKASH (b) Father's/ Husband's Name : SELLAMUTHU
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 41/2020 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Running cow farm (g) Address : D.No.1/59, Nehru Street, Rasipalayam post, Sulur taluk, Coimbatore District
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Mr. V. VIJAYAKUMAR, Village Administrative Officer, Rasipalayam village, Sulur taluk, Coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/08/2020 28/8/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
28.08.2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. Arumugam, Inspector of Police
Rank: நிலை V.S.P.C. No. எண் ..........

<u>கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2020/AC/CB, u/s 7(a) & (b) of Prevention of Corruption Act, 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>

28.08.2020–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 08.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம், சூலூர் தாலூகா, இராசிபாளையம் அஞ்சல், வடக்கு வீதி, க.எண்.1/59 ல் வசிக்கும் திரு.செல்லமுத்து மகன் S.பிரகாஷ், வயது–41 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி புகார் மனு கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையிலும், வாதி கொடுத்த குறுந்தகடில் பதிவு செய்யப்பட்டிருந்ததை கணினியில் பதிவிறக்கம் செய்து கேட்டு பார்த்ததிலிருந்தும், மேலும் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் திரு.விஜயகுமார் என்பவர் புகார்தாரரின் விவசாய நிலத்திற்கு சிறு குறு விவசாயி சான்றிதழ் பெற பரிந்துரை செய்து தருவதற்காகவும், ஏற்கனவே பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்து பெற்று தந்ததிற்காகவும் லஞ்சமாக பணம் ரூ.4,000/– கேட்டது தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கு தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. மேலும் புகார்தாரரிடம் பொறி வைப்பு நடவடிக்கைக்கு பற்றிய விவரம் கூறி பொறி வைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் இருப்பின் எதிரி கேட்ட லஞ்ச பணம் ரூ.4000/– கொடுக்கவேண்டி அறிவுறுத்தப்பட்டது. அவரும் தான் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவித்து பணம் ரூ.4000/– கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 28.08.2020 ம் தேதி காலை 08.20 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2020/AC/CB u/s 7(a) & (b) of PC Act, 1988 as Amended by the PC (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விவரம் பின்வருமாறு – அனுப்புனர்

S.பிரகாஷ், வயது 41, த/பெ. செல்லமுத்து, க.எண்.1/59, வடக்கு வீதி, இராசிபாளையம் அஞ்சல், சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் – 641402. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் கோவை சூலூர் தாலுகாவில் அமைந்துள்ள இராசிபாளையம் கிராமத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மாட்டு பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் எனது ஊரில் கடந்த 31.07.2020 ஆம் தேதி திரு.நஞ்சப்பன் என்பவரது மகன் திரு.அய்யாசாமி மற்றும் அவரது குடும்பத்தாரிடமிருந்து இராசிபாளையம் கிராம க.ச.எண்.75/2C, 75/2D மற்றும் 77/2 ல் உள்ள 1.64 ஏக்கர் விவசாயம் பூமியை வாங்கி சூலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.6754/2020 ஆக கிரையம் செய்து கொண்டேன். அதன் பின்னர் நான் 07.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணிக்கு எங்கள் ஊர் இராசிபாளையத்தில் இருக்கும் கூட்டுறவு வங்கியில் உள்ள இ–சேவை மையத்தை அணுகி மேற்படி நான் வாங்கிய விவசாய பூமி எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதா என்று விசாரித்தேன். அவர்கள் கம்ப்யூட்டரில் பார்த்து விட்டு எனது நிலத்தில் க.ச.எண்.75/2C மற்றும் 77/2 க்கு மட்டுமே எனது பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கான பரிந்துரைக்கு இராசிபாளையம் கிராம நிர்வாக அலுவலரிடம் அவரது பரிந்துரைக்கு நிலுவையில் உள்ளது என்றும் கிணறு அமைந்துள்ள க.ச.எண்.75/2D க்கான விவரம் அதில் குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்தனர். அதனால் நான் அன்றே இராசிபாளையம் கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் என்பவரை பார்த்து மேற்படி விவரத்தை தெரிவித்தேன். அவரும் தனது செல்போனில் செக் செய்து தன்னுடைய பரிந்துரைக்காக நிலுவையில் இருப்பதாகவும் க.ச.எண்.75/2D க்கான விவரம் அதில் குறிப்பிடவில்லை என்றும் அதனால் அந்த க.ச.எண்.75/2D க்கு உண்டான நிலத்தினை எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய வேண்டி ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறும் என்னிடம் கூறினார். அதன்படி நானும் அன்றையே தினமே இராசிபாளையத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் இருக்கும் இ–சேவை மையத்தில் எனது பெயருக்கு பட்டா மாறுதல் வேண்டி ஆன்லைனில் விண்ணப்பித்தேன். பட்டா மாறுதலுக்கு 15 நாட்களுக்கு மேலாகியும் என் பெயருக்கு பட்டா மாறுதல் ஆகாததால் கடந்த 24.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 02.30 மணிக்கு இராசிபாளையம் கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ திரு.விஜயகுமாரை மீண்டும் சந்தித்து எனது பெயருக்கு பட்டா மாறுதல் ஆகாமல் இருக்கும் விவரத்தை அவரிடம் கூறினேன். அப்போது அவர் என்னிடம் எனது நிலத்தில் மூன்று

சப்டிவிஷன் உள்ளது என்றும் அதற்கு அவருக்கு தனியாக ரூ.10,000/- கொடுத்தால் மட்டுமே பட்டா மாறுதல் கிடைக்க பரிந்துரை செய்ய முடியும் என்று கூறினார். அதற்கு நான் அமைதியாக இருந்து விட்டேன். அதனை தொடர்ந்து எனது நிலத்தில் உள்ள தென்னை மரத்திற்கு சொட்டு நீர்பாசன வசதி செய்ய வேண்டி இருந்ததால் நான் மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி செய்வதற்கு என்ன வழிமுறைகள் என்று வி.ஏ.ஓ விடம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம் உங்களது பெயருக்கு பட்டா மாறுதல் நிலுவையில் உள்ளது அதை நான் உங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்துவிடுகிறேன் என்றும், அதன் பின்னர் அந்த பட்டா மற்றும் நான் கொடுக்க இருக்கும் உரிமை சான்றிதழ் மற்றும் அடங்கலை கொண்டுதான் ஆன்லைன் மூலம் சிறு குறு விவசாயி சான்று வேண்டி விண்ணப்பிக்க முடியும் என்றும் கூறினார். மேலும் மேற்படி மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி பெற சிறு குறு விவசாயி சான்றை தாசில்தார் தான் தருவார் என்றும் அதற்கும் அவர் பரிந்துரை செய்தால் மட்டுமே தாசில்தார் சான்று வழங்கமுடியும் என்றும் அதற்கு நீங்கள் எனக்கு தனியாக ரூ.10,000/- கொடுத்தால் மட்டுமே நான் பரிந்துரை செய்வேன் என்று உறுதியாக கூறினார். மேலும் பட்டா மாறுதல் எனது பெயருக்கு மாறிய பிறகு தன்னை வந்து பார்க்கும் படியும் அப்போது அடங்கல் மற்றும் உரிமை சான்றிதழை கொடுப்பதாகவும் அதனை பெற்று ஆன்லைன் மூலம் சிறு குறு சான்று வேண்டி விண்ணப்பித்துக் கொள்ளுமாறும் கூறினார். ஆக மொத்தம் இரண்டு வேலைகளுக்கும் சேர்த்து ரூ.20,000/- லஞ்சமாக கேட்டார். ஆனால் அவர் கேட்ட தொகை மிகவும் அதிகமாக இருந்ததால் அவரிடம் எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்வதற்கும், சிறு குறு விவசாயி சான்றிதழ் பெறுவதற்கும் சேர்த்து, பணத்தை குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி என்றும், இரண்டு வேலைகளுக்கும் சேர்த்து ரூ.10,000/- கொடுத்து விடுங்கள், நான் பரிந்துரை செய்து தாசில்தார் அலுவலகத்தில் இருந்து உங்களுக்கு கிடைக்கவேண்டிய பட்டா பெயர் மாறுதல் சான்று மற்றும் சிறு குறு விவசாயி சான்றும் கிடைக்க ஏற்பாடு செய்துவிடுகிறேன். என்று கூறினார். அதன் பின்னர் அன்றைய தினமே வி.ஏ.ஓ என்னிடம் பணம் எவ்வளவு உள்ளது என்று கேட்டார். நான் ரூ.6000/- மட்டுமே உள்ளதாக கூறினேன். அதற்கு அவர் அந்த பணத்தை கொடுத்து விட்டு செல்லுங்கள், நான் பட்டா மாறுதலுக்கான பரிந்துரையை செய்துவிடுகிறேன் என்று உறுதியளித்தார். நானும் வி.ஏ.ஓ கட்டாய படுத்தி கேட்டதால் வேறு வழியில்லாததால் அவர் கேட்ட தொகை ரூ.6,000/- ஐ கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் ஒரு கவரில் போட்டு கொடுங்கள் என்று அறிவுறுத்தினார். அதன் பேரில் நானும் வெளியே

சென்று ஒரு கவரை வாங்கி வந்து அதில் பணம் ரூ.6,000/— ஐ வைத்து கொடுத்தேன். பின்னர் அங்கிருந்து கிளம்பி வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் ரூ.6,000/— லஞ்சம் கொடுத்தால்தான் நான் 07.08.2020 ஆம் தேதி ஆன்லைனில் விண்ணப்பம் செய்த எனது கிணறு அமைந்துள்ள க.ச.எண்.75/2D க்கு எனது பெயருக்கு பட்டா மாறியிருந்தது. அதனை தொடர்ந்து 26.08.2020 ஆம் தேதி காலை சுமார் 11.50 மணியளவில் இராசிபாளையம் வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் அவருடைய செல்போன் எண்.8903232170 லிருந்து என்னுடைய செல்போன் எண்.9943770000 க்கு தொடர்பு கொண்டு பேசினார். அப்போது எனது பெயருக்கு பட்டா மாறுதல் அன்றைய தினமே கிடைத்துவிடும் என்றும் அதனை மறுநாள் (27.08.2020) தன்னிடம் கொடுக்குமாறும் அதன் பின்பு உரிமை சான்று மற்றும் அடங்கல் ஆகியவற்றை தன்னிடமிருந்து பெற்ற பின்னர் ஆன்லைன் மூலமாக சிறு குறு விவசாயி சான்றிதழ் வேண்டி விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தினார். அதன்படி 26.08.2020 ஆம் தேதி நிலத்தின் பட்டா என் பெயருக்கு மாறுதல் ஆகிவிட்டது. மேற்படி இராசிபாளையம் வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் சொல்லியபடி 27.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு வி.ஏ.ஓ அலுவலகம் சென்று அவரை நேரில் சந்தித்து எனது பட்டா பெயர் மாற்றம் ஆன விவரத்தை சொன்னேன். அப்போது அவர் என்னிடம் அவர் கேட்ட பேலன்ஸ் தொகை கொடுங்கள் என்று சைகை மூலம் கேட்டார். நானும் வேறுவழியில்லாமல் நான் வைத்திருந்த பணம் ரூ.2,500/— ஐ அவரிடம் கொடுத்தேன். அதனை அவர் பெற்றுக்கொண்டு பேலன்ஸ் ரூ.2000/— எங்கே என்று கேட்டார். அதற்கு நான் இதுவரை ரூ.8,500/— கொடுத்துவிட்டேன் என்று சொல்ல, அதற்கு அவர் எத்தனை ரூபாய் சொல்லியிருந்தேன் என்று கேட்டார். அதற்கு நான் ரூ.10,000/— என்று சொன்னேன். அத்ற்கு அவர் பழைய பேலன்சை சேர்த்து ரூ.4,000/— ஆக கொடுத்து விடுங்கள் என்று கூறினார். அதனை தொடர்ந்து அடங்கல் மற்றும் உரிமை சான்று ஆகியவற்றை என்னிடம் கொடுத்து இதனுடன் ஆதார் அட்டை, வில்லங்க சான்று, கிரைய பத்திரம் ஆகியவற்றை இணைத்து ஆன்லைன் மூலம் சிறு குறு விவசாயி சான்று வேண்டி ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்குமாறும் கூறினார். மேலும் வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் வலியுறுத்திருந்தபடி நிலுவை தொகையான ரூ.2,000/—மும் அத்துடன் மேலும் கூடுதலாக இன்னொரு ரூ.2,000/— சேர்த்து ஆக மொத்தம் 4,000/— ரூபாய் பணம் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பித்த ஒப்புகை சீட்டுடன் உடனே அவரை வந்து பார்க்குமாறும் அப்போது அவர் பரிந்துரை செய்வதாகவும், நீங்கள் லேட்டாக வந்தால் நான் RDO அலுவலக மீட்டிங்க்கு சென்று விடுவேன் என்றும் கூறினார். மேற்படி எனக்கும் வி.ஏ.ஓ விற்கும் நடைபெற்ற உரையாடல்களை

எனது செல்போனில் பதிவு செய்தேன். அதன்படி அன்றை தினமே நான் சிறு குறு விவசாயி சான்றிதழ் பெறுவதற்காக இராசிபாளையத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் உள்ள இ–சேவை மையத்தில் விண்ணப்பித்துவிட்டு அதற்குண்டான ஒப்புகை சீட்டை பெற்று கொண்டேன். மேற்படி ஒப்புகை சீட்டில், குடிமக்கள் கணக்கு எண்(CAN).13312108440636 ல் 27.08.2020 தேதியில் எனது விண்ணப்ப எண்.TN920200827869 ஐ பெற்றுகொண்டதற்காக ஒப்புகை வழங்கபட்டிருந்தது. இந்த ஒப்புகை சீட்டுடன் இராசிபாளையம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு அன்றைய மதியமே சென்று பார்த்தேன். அப்போது வி.ஏ.ஓ அலுவல் ரீதியாக RDO மீட்டிங்க்கு சென்று விட்ட விவரம் தெரியவந்தது. நானும் அவர் மீட்டிங் சென்றுவிட்டதால் அவரை தொந்தரவு செய்யாமல், நேற்று மாலை சுமார் 07.00 மணியளவில் எனது செல்போனில் இருந்து வி.ஏ.ஓ செல்போனிற்கு தொடர்பு கொண்டு நான் ஆன்லைனில் பதிவு செய்த விவரத்தை தெரிவித்தேன். அப்போது அவர் மறுநாள் அவர் கேட்ட பேலன்ஸ் தொகையுடன் தன்னை மறுநாள் 28.08.2020 ஆம் தேதி வந்து பார்க்கும்படி கூறினார். நான் நாளைக்கே பணம் கொடுக்க வேணுமாங்க என்று கேட்டேன். அவர் ஆமாங்க அப்பதானே பிராசஸ் பண்ணமுடியும் என்று சொன்னார். நான் சர்டிபிக்கேட் வாங்க வரும்போது கொடுத்திடலாம்னு பார்த்தேன் என்று சொன்னேன். உடனே அவர் சர்டிபிக்கேட் வாங்கதான் இந்த பணமே என்று கறாறாக கூறி ரூ.4000/– கண்டிப்பாக இன்று 28.08.2020 ஆம் தேதி கொடுக்க வேண்டும் என்று கூறிவிட்டு போனை வைத்து விட்டார். மேற்படி எனக்கும் வி.ஏ.ஓ விற்கும் நடந்த உரையாடல்களை எனது செல்போனில் பதிவு செய்தேன். நான் வீட்டிற்கு சென்று யோசனை செய்து பார்த்ததில், வி.ஏ.ஓ என்னிடம் முதலில் ரூ.20,000/– கேட்டு, அதனை குறைத்துக்கொள்ள நான் கேட்டுகொண்டதின் பேரில் லஞ்சமாக கேட்ட தொகையை ரூ.10,000/– ஆக குறைத்து கூறி, இதுவரை மேற்படி வேலைகளுக்கு என்னை கட்டாயப்படுத்தி என்னிடம் மொத்தம் ரூ.8,500/– லஞ்சமாக பெற்றுக்கொண்டு, தற்போது சிறு குறு விவசாயி சான்று பெற வேண்டி பரிந்துரை செய்து உத்தரவு பெற்றுதர மேலும் ரூ.4,000/– லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கட்டாயப்படுத்துகிறார். எனவே லஞ்ச பணம் கேட்டு கட்டாய படுத்தும் வி.ஏ.ஓ திரு.விஜயகுமாருக்கு என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். மேலும் நான் 27.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் அவர்களை நேரில் சந்தித்து பேசிய போது எங்களுக்குள் நடந்த உரையாடல்களையும், மாலை சுமார் 07.00 மணிக்கு எனது செல்போனில் வி.ஏ.ஓ திரு.விஜயகுமாரிடம் பேசிய உரையாடல்களையும், நான்

செல்போனில் பதிவு செய்து அதனை CD ல் பதிவிறக்கம் செய்துள்ளேன். அந்த CD ஐ தங்களிடம் தற்போது புகார் மனுவுடன் உரிய நடவடிக்கைக்காக இணைத்து கொடுக்கின்றேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/ (S.பிரகாஷ், 28/08/2020) இடம் – கோவை, நாள் – 28.08.2020. Respected Madam, Received a complaint on 28.08.2020 at 08.00 hrs Sd/- x-x-x-x 28/08/2020 (G.Arumugam), Inspector of Police, V&AC Coimbatore. Respected Madam, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.4/2020/AC/CB u/s 7(a) (b) of Prevention of Corruption Act, 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 28.08.2020 at 08.20 hrs Sd/- x-x-x-x 28/08/2020 (G.Arumugam), Inspector of Police, V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார்மனு மற்றும் 65(B),(4)(C) of the Indian Evidence Act-1872 சான்றுடன் கூடிய Compact Disk (CD-R) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(G.ஆறுமுகம்)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.

அனுப்புநர்

S.பிரகாஷ், வயது 41,
த/பெ. செல்லமுத்து,
க.எண்.1/59, வடக்கு வீதி,
இராசிபாளையம் அஞ்சல்,
சூலூர் தாலுகா,
கோயம்புத்தூர் – 641402.

பெறுநர்

காவல் ஆய்வாளர்,
லஞ்ச ஒழிப்பு துறை,
கோயம்புத்தூர்.

அய்யா,

நான் கோவை சூலூர் தாலுகாவில் அமைந்துள்ள இராசிபாளையம் கிராமத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் மாட்டு பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் எனது ஊரில் கடந்த 31.07.2020 ஆம் தேதி திரு.நஞ்சப்பன் என்பவரது மகன் திரு.அய்யாசாமி மற்றும் அவரது குடும்பத்தாரிடமிருந்து இராசிபாளையம் கிராம க.ச.எண்.75/2C, 75/2D மற்றும் 77/2 ல் உள்ள 1.64 ஏக்கர் விவசாயம் பூமியை வாங்கி சூலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.6754/2020 ஆக கிரயம் செய்து கொண்டேன். அதன் பின்னர் நான் 07.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணிக்கு எங்கள் ஊர் இராசிபாளையத்தில் இருக்கும் கூட்டுறவு வங்கியில் உள்ள இ–சேவை மையத்தை அணுகி மேற்படி நான் வாங்கிய விவசாய பூமி எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதா என்று விசாரித்தேன். அவர்கள் கம்ப்யூட்டரில் பார்த்து விட்டு எனது நிலத்தில் க.ச.எண்.75/2C மற்றும் 77/2 க்கு மட்டுமே எனது பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கான பரிந்துரைக்கு இராசிபாளையம் கிராம நிர்வாக அலுவலரிடம் அவரது பரிந்துரைக்கு நிலுவையில் உள்ளது என்றும் கிணறு அமைந்துள்ள க.ச.எண்.75/2D க்கான விவரம் அதில் குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்தனர். அதனால் நான் அன்றே இராசிபாளையம் கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் என்பவரை பார்த்து மேற்படி விவரத்தை தெரிவித்தேன். அவரும் தனது செல்போனில் செக் செய்து தன்னுடைய பரிந்துரைக்காக நிலுவையில் இருப்பதாகவும் க.ச.எண்.75/2D க்கான விவரம் அதில் குறிப்பிடவில்லை என்றும் அதனால் அந்த க.ச.எண்.75/2D க்கு உண்டான நிலத்தினை எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய வேண்டி ஆன்லைனில் விண்ணப்பிக்குமாறும் என்னிடம் கூறினார். அதன்படி நானும் அன்றையே தினமே இராசிபாளையத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் இருக்கும் இ–சேவை மையத்தில் எனது பெயருக்கு பட்டா மாறுதல் வேண்டி ஆன்லைனில் விண்ணப்பித்தேன். பட்டா மாறுதலுக்கு 15 நாட்களுக்கு மேலாகியும் என்

பெயருக்கு பட்டா மாறுதல் ஆகாததால் கடந்த 24.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 02.30 மணிக்கு இராசிபாளையம் கிராம நிர்வாக அலுவலகம் சென்று வி.ஏ.ஓ திரு.விஜயகுமாரை மீண்டும் சந்தித்து எனது பெயருக்கு பட்டா மாறுதல் ஆகாமல் இருக்கும் விவரத்தை அவரிடம் கூறினேன். அப்போது அவர் என்னிடம் எனது நிலத்தில் மூன்று சப்டிவிஷன் உள்ளது என்றும் அதற்கு அவருக்கு தனியாக ரூ.10,000/– கொடுத்தால் மட்டுமே பட்டா மாறுதல் கிடைக்க பரிந்துரை செய்ய முடியும் என்று கூறினார். அதற்கு நான் அமைதியாக இருந்து விட்டேன். அதனை தொடர்ந்து எனது நிலத்தில் உள்ள தென்னை மரத்திற்கு சொட்டு நீர்பாசன வசதி செய்ய வேண்டி இருந்ததால் நான் மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி செய்வதற்கு என்ன வழிமுறைகள் என்று வி.ஏ.ஓ விடம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம் உங்களது பெயருக்கு பட்டா மாறுதல் நிலுவையில் உள்ளது அதை நான் உங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்துவிடுகிறேன் என்றும், அதன் பின்னர் அந்த பட்டா மற்றும் நான் கொடுக்க இருக்கும் உரிமை சான்றிதழ் மற்றும் அடங்கலை கொண்டுதான் ஆன்லைன் மூலம் சிறு குறு விவசாயி சான்று வேண்டி விண்ணப்பிக்க முடியும் என்றும் கூறினார். மேலும் மேற்படி மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி பெற சிறு குறு விவசாயி சான்றை தாசில்தார் தான் தருவார் என்றும் அதற்கும் அவர் பரிந்துரை செய்தால் மட்டுமே தாசில்தார் சான்று வழங்கமுடியும் என்றும் அதற்கு நீங்கள் எனக்கு தனியாக ரூ.10,000/– கொடுத்தால் மட்டுமே நான் பரிந்துரை செய்வேன் என்று உறுதியாக கூறினார். மேலும் பட்டா மாறுதல் எனது பெயருக்கு மாறிய பிறகு தன்னை வந்து பார்க்கும் படியும் அப்போது அடங்கல் மற்றும் உரிமை சான்றிதழை கொடுப்பதாகவும் அதனை பெற்று ஆன்லைன் மூலம் சிறு குறு சான்று வேண்டி விண்ணப்பித்துக் கொள்ளுமாறும் கூறினார். ஆக மொத்தம் இரண்டு வேலைகளுக்கும் சேர்த்து ரூ.20,000/– லஞ்சமாக கேட்டார். ஆனால் அவர் கேட்ட தொகை மிகவும் அதிகமாக இருந்ததால் அவரிடம் எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்வதற்கும், சிறு குறு விவசாயி சான்றிதழ் பெறுவதற்கும் சேர்த்து, பணத்தை குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி என்றும், இரண்டு வேலைகளுக்கும் சேர்த்து ரூ.10,000/– கொடுத்து விடுங்கள், நான் பரிந்துரை செய்து தாசில்தார் அலுவலகத்தில் இருந்து உங்களுக்கு கிடைக்கவேண்டிய பட்டா பெயர் மாறுதல் சான்று மற்றும் சிறு குறு விவசாயி சான்றும் கிடைக்க ஏற்பாடு செய்துவிடுகிறேன். என்று கூறினார். அதன் பின்னர் அன்றைய தினமே வி.ஏ.ஓ என்னிடம் பணம் எவ்வளவு உள்ளது என்று கேட்டார். நான் ரூ.6000/– மட்டுமே உள்ளதாக கூறினேன். அதற்கு அவர் அந்த பணத்தை கொடுத்து விட்டு செல்லுங்கள், நான் பட்டா மாறுதலுக்கான பரிந்துரையை செய்துவிடுகிறேன் என்று உறுதியளித்தார். நானும் வி.ஏ.ஓ கட்டாய படுத்தி கேட்டதால் வேறு வழியில்லாததால் அவர் கேட்ட தொகை ரூ.6,000/– ஐ கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் ஒரு கவரில் போட்டு கொடுங்கள் என்று அறிவுறுத்தினார். அதன் பேரில் நானும் வெளியே சென்று ஒரு கவரை வாங்கி வந்து அதில் பணம் ரூ.6,000/– ஐ வைத்து கொடுத்தேன். பின்னர் அங்கிருந்து கிளம்பி வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் ரூ.6,000/– லஞ்சம் கொடுத்தால்தான் நான் 07.08.2020 ஆம் தேதி ஆன்லைனில் விண்ணப்பம் செய்த எனது கிணறு அமைந்துள்ள க.ச.எண்.75/2D க்கு எனது பெயருக்கு பட்டா மாறியிருந்தது. அதனை தொடர்ந்து 26.08.2020 ஆம் தேதி காலை

சுமார் 11.50 மணியளவில் இராசிபாளையம் வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் அவருடைய செல்போன் எண்.8903232170 லிருந்து என்னுடைய செல்போன் எண்.9943770000 க்கு தொடர்பு கொண்டு பேசினார். அப்போது எனது பெயருக்கு பட்டா மாறுதல் அன்றைய தினமே கிடைத்துவிடும் என்றும் அதனை மறுநாள் (27.08.2020) தன்னிடம் கொடுக்குமாறும் அதன் பின்பு உரிமை சான்று மற்றும் அடங்கல் ஆகியவற்றை தன்னிடமிருந்து பெற்ற பின்னர் ஆன்லைன் மூலமாக சிறு குறு விவசாயி சான்றிதழ் வேண்டி விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தினார். அதன்படி 26.08.2020 ஆம் தேதி நிலத்தின் பட்டா என் பெயருக்கு மாறுதல் ஆகிவிட்டது. மேற்படி இராசிபாளையம் வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் சொல்லியபடி 27.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு வி.ஏ.ஓ அலுவலகம் சென்று அவரை நேரில் சந்தித்து எனது பட்டா பெயர் மாற்றம் ஆன விவரத்தை சொன்னேன். அப்போது அவர் என்னிடம் அவர் கேட்ட பேலன்ஸ் தொகை கொடுங்கள் என்று சைகை மூலம் கேட்டார். நானும் வேறுவழியில்லாமல் நான் வைத்திருந்த பணம் ரூ.2,500/– ஐ அவரிடம் கொடுத்தேன். அதனை அவர் பெற்றுக்கொண்டு பேலன்ஸ் ரூ.2000/– எங்கே என்று கேட்டார். அதற்கு நான் இதுவரை ரூ.8,500/– கொடுத்துவிட்டேன் என்று சொல்ல, அதற்கு அவர் எத்தனை ரூபாய் சொல்லியிருந்தேன் என்று கேட்டார். அதற்கு நான் ரூ.10,000/– என்று சொன்னேன். அதற்கு அவர் பழைய பேலன்சை சேர்த்து ரூ.4,000/– ஆக கொடுத்து விடுங்கள் என்று கூறினார். அதனை தொடர்ந்து அடங்கல் மற்றும் உரிமை சான்று ஆகியவற்றை என்னிடம் கொடுத்து இதனுடன் ஆதார் அட்டை, வில்லங்க சான்று, கிரைய பத்திரம் ஆகியவற்றை இணைத்து ஆன்லைன் மூலம் சிறு குறு விவசாயி சான்று வேண்டி ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்குமாறும் கூறினார். மேலும் வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் வலியுறுத்திருந்தபடி நிலுவை தொகையான ரூ.2,000/–மும் அத்துடன் மேலும் கூடுதலாக இன்னொரு ரூ.2,000/– சேர்த்து ஆக மொத்தம் 4,000/– ரூபாய் பணம் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பித்த ஒப்புகை சீட்டுடன் உடனே அவரை வந்து பார்க்குமாறும் அப்போது அவர் பரிந்துரை செய்வதாகவும், நீங்கள் லேட்டாக வந்தால் நான் RDO அலுவலக மீட்டிங்க்கு சென்று விடுவேன் என்றும் கூறினார். மேற்படி எனக்கும் வி.ஏ.ஓ விற்கும் நடைபெற்ற உரையாடல்களை எனது செல்போனில் பதிவு செய்தேன். அதன்படி அன்றை தினமே நான் சிறு குறு விவசாயி சான்றிதழ் பெறுவதற்காக இராசிபாளையத்தில் உள்ள கூட்டுறவு வங்கியில் உள்ள இ–சேவை மையத்தில் விண்ணப்பித்துவிட்டு அதற்குண்டான ஒப்புகை சீட்டை பெற்று கொண்டேன். மேற்படி ஒப்புகை சீட்டில், குடிமக்கள் கணக்கு எண்(CAN).13312108440636 ல் 27.08.2020 தேதியில் எனது விண்ணப்ப எண்.TN920200827869 ஐ பெற்றுகொண்டதற்காக ஒப்புகை வழங்கபட்டிருந்தது. இந்த ஒப்புகை சீட்டுடன் இராசிபாளையம் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு அன்றைய மதியமே சென்று பார்த்தேன். அப்போது வி.ஏ.ஓ அலுவல் ரீதியாக RDO மீட்டிங்க்கு சென்று விட்ட விவரம் தெரியவந்தது. நானும் அவர் மீட்டிங் சென்றுவிட்டதால் அவரை தொந்தரவு செய்யாமல், நேற்று மாலை சுமார் 07.00 மணியளவில் எனது செல்போனில் இருந்து வி.ஏ.ஓ செல்போனிற்கு தொடர்பு கொண்டு நான் ஆன்லைனில் பதிவு செய்த விவரத்தை தெரிவித்தேன். அப்போது அவர் மறுநாள் அவர் கேட்ட பேலன்ஸ் தொகையுடன் தன்னை மறுநாள் 28.08.2020 ஆம் தேதி வந்து பார்க்கும்படி கூறினார்.

நான் நாளைக்கே பணம் கொடுக்க வேணுமாங்க என்று கேட்டேன். அவர் ஆமாங்க அப்பதானே பிராசஸ் பண்ணமுடியும் என்று சொன்னார். நான் சர்டிபிக்கேட் வாங்க வரும்போது கொடுத்திடலாம்னு பார்த்தேன் என்று சொன்னேன். உடனே அவர் சர்டிபிக்கேட் வாங்கதான் இந்த பணமே என்று கறாராக கூறி ரூ.4000/– கண்டிப்பாக இன்று 28.08.2020 ஆம் தேதி கொடுக்க வேண்டும் என்று கூறிவிட்டு போனை வைத்து விட்டார். மேற்படி எனக்கும் வி.ஏ.ஓ விற்கும் நடந்த உரையாடல்களை எனது செல்போனில் பதிவு செய்தேன். நான் வீட்டிற்கு சென்று யோசனை செய்து பார்த்ததில், வி.ஏ.ஓ என்னிடம் முதலில் ரூ.20,000/– கேட்டு, அதனை குறைத்துக்கொள்ள நான் கேட்டுகொண்டதின் பேரில் லஞ்சமாக கேட்ட தொகையை ரூ.10,000/– ஆக குறைத்து கூறி, இதுவரை மேற்படி வேலைகளுக்கு என்னை கட்டாயப்படுத்தி என்னிடம் மொத்தம் ரூ.8,500/– லஞ்சமாக பெற்றுக்கொண்டு, தற்போது சிறு குறு விவசாயி சான்று பெற வேண்டி பரிந்துரை செய்து உத்தரவு பெற்றுதர மேலும் ரூ.4,000/– லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கட்டாயப்படுத்துகிறார். எனவே லஞ்ச பணம் கேட்டு கட்டாய படுத்தும் வி.ஏ.ஓ திரு.விஜயகுமாருக்கு என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். மேலும் நான் 27.08.2020 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு வி.ஏ.ஓ திரு.விஜயகுமார் அவர்களை நேரில் சந்தித்து பேசிய போது எங்களுக்குள் நடந்த உரையாடல்களையும், மாலை சுமார் 07.00 மணிக்கு எனது செல்போனில் வி.ஏ.ஓ திரு.விஜயகுமாரிடம் பேசிய உரையாடல்களையும், நான் செல்போனில் பதிவு செய்து அதனை CD ல் பதிவிறக்கம் செய்துள்ளேன். அந்த CD ஐ தங்களிடம் தற்போது புகார் மனுவுடன் உரிய நடவடிக்கைக்காக இணைத்து கொடுக்கின்றேன்.

இப்படிக்கு,

இடம் – கோவை,
நாள் – 28.08.2020.

Respected madam, Received a complaint on 28/8/20 [illegible]

Respected madam

After conducting discreet enquiry [illegible] a case in Coimbatore V&AC Cr. No. 4/2020/AC/ u/s 7 [illegible] Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and investigation taken up by me [illegible]

[illegible] 28/8/20

( [illegible] )
[illegible]
V&AC
Coimbatore